# அதிகாரப்பூர்வமற்ற உஸ்தாத்




உஸ்தாத்ஜி, எந்தப் பள்ளியிலிருந்து நீங்கள் நிதிக் கல்வியைக் கற்றுக்கொண்டீர்கள்?
மந்திரிஜி, மாயவாதிகள் எனக்கு தெய்வீக தொலைநோக்குப் பார்வையை கொடுத்துள்ளனர். இதனால் லாபமும் இழப்பும் என்னனு துல்லியமா கணிக்க முடிகிறது.
உண்மையில் ஒரு அரிய திறமை! இருப்பினும், நிதி அமைச்சகக் கூட்டங்களில் நான் உங்களை ஒருபோதும் பார்த்ததில்லை.
ஓ, நான் ஒரு அதிகாரப்பூர்வ உறுப்பினரை விட ஒரு ஃப்ரீலான்ஸ் ஆலோசகர்.
எனவே, நிதி ஆலோசனை வழங்க உங்களுக்கு தகுதியோ அல்லது அதிகாரப்பூர்வ அந்தஸ்தோ தேவை இல்லை.
மந்திரிஜி, நான் ஒரு எண் மந்திரவாதி! என்னிடம் ஏதாவது கேளுங்கள்... தொடருங்கள்!
சரி, இந்தக் காட்டில் எத்தனை கொசுக்கள் உள்ளன என்று சொல்ல முடியுமா?
த்வாக்
இது என்ன அர்த்தமற்ற கேள்வி?!
யாராலும் பதில் சொல்ல முடியாது... உஸ்தாத் கியானியை மட்டும் விட்டுவிடுங்கள்.
மரியாதைக்குறிய, மகாராஜா, நீங்கள் எனக்கு 100 தங்க நாணயங்கள் கொடுத்தால், சரியான எண்ணிக்கையை என்னால் உங்களுக்குச் சொல்ல முடியும்.
இதோ, இதை எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது சொல்லுங்கள்.
இந்தக் காட்டில் 87,56,943 கொசுக்கள் உள்ளன.


ஹா! நீ சும்மா சொல்கிறாய்.
ரொம்ப சரி. வீரர்கள் கொசுக்களைப் பிடித்து கணக்கு எடுக்கலாம். அப்போதான் நான் சொல்றது சரியா, தவறா என நமக்குப் புரியும்.
அபத்தமானது! இந்த சாத்தியமற்ற பணியை முடிக்க வாரங்கள் அல்லது மாதங்கள் கூட ஆகும்.
ஆனால், அதற்குள், நான் உங்கள் நாணயங்களைக் கொண்டு 'தப்பித்திருப்பேன்'...
...உஸ்தாத் கியானி திட்டமிட்டது போலவே! அவருடைய பரிந்துரைகள் உங்களைத் தவறாக வழிநடத்துகின்றன என்பதை நீங்கள் உணரும் நேரத்தில், அவர் உங்கள் பணத்தையெல்லாம் மாயமாக்கி இருப்பார்..
ஓ, அவரை குருட்டுத்தனமாக நம்பி நாங்கள் முட்டாள்களாக இருந்தோம்!
உஸ்தாத்ஜியைப் போலவே, சரியான தகுதி, உரிமம் அல்லது பதிவு இல்லாமல் பல மோசடியாளர்கள் ஆன்லைனில் நிதி ஆலோசனை வழங்குகிறார்கள்... அவர்களின் ஆலோசனையை நம்புவதற்கு முன்பு, அந்த நபரின் நற்சான்றிதழ்களை எப்போதும் சரிபார்க்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருப்பதன் மூலம் 'மோசடியைத் தகர்க்கவும்'!
இந்த மோசடி முட்டாளை உடனடியாக நிலவறை எஜமானரிடம் ஒப்படைத்துவிடு!
≈உல்ப்≈
உஸ்தாத்ஜி, மூட்டைப் பூச்சிகள் அல்லது கொசுக்கள் உள்ள சிறைச்சாலையை நீங்கள் விரும்புவீர்களா?
ஒருவேளை அவருடைய கூழாங்கற்கள் அவருக்கு சரியானதை கணிக்கக்கூடும்!

# செயல்பாடு

நிதித் திட்டத்தில் உங்களுக்கு உதவ மூன்று முதலீட்டு ஆலோசகர்கள் உங்களை அணுகியுள்ளனர். இருப்பினும், அவர்களில் ஒருவர் மட்டுமே நம்பகமானவர் மற்றும் அவரால்தான் மோசடி இல்லாத பரிவர்த்தனையை உறுதி செய்ய முடிகிறது.
அது யார் என்று உங்களால் யூகிக்க முடியுமா?




### திரு. பியூஷ்

- ஒரு முன்னணி முதலீட்டு நிறுவனத்தில் மேலாளராக இருப்பதாகக் கூறுகிறார்
- தனது SEBI பதிவு விவரங்களை பின்னர் பகிர்ந்து கொள்வதாக உறுதியளிக்கிறார்
- ‘வரையறுக்கப்பட்ட சலுகை’ காலத்தில் மட்டுமே கிடைக்கும் அற்புதமான திட்டங்களைப் பகிர்ந்து கொள்கிறார்
- சலுகையை நீங்கள் தவறவிடக்கூடாது என்பதால் விரைவில் அணுகவும் என்கிறார்.



### சுமன் சர்மா

- உங்கள் பகுதியில் நிதி ஆலோசகராகப் பணிபுரிகிறார்.
- முதலீட்டுத் துறையில் 20 வருட அனுபவம் இருப்பதாகக் கூறிக்கொள்கிறார், ஆனால் SEBI-யில் பதிவு செய்யப்படாதவர்
- எந்த அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலும் பட்டியலிடப்படாத திட்டங்களை விளம்பரப்படுத்துகிறார்
- உங்கள் ஆதரவைப் பெற நிறைய தேவையற்ற பாராட்டுகளையும் வாக்குறுதிகளையும் கூறுகிறார்



### ராமு காகா

- ஒரு முதலீட்டு ஆலோசனை நிறுவனத்தில் பணிபுரிகிறார்
- தனது அடையாள அட்டையை SEBI பதிவு விவரங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்
- உங்கள் தனிப்பட்ட மற்றும் நிதி இலக்குகளைப் பற்றி விவாதிக்கிறார்
- நம்பத்தகாத ஆதாயங்களை வழங்குவதில்லை

**பதில்:** ஆம், அது ராமு காகாதான். நம்பகமான ஆலோசகர்கள் தங்கள் தகுதி மற்றும் பதிவு விவரங்களை வெளிப்படையாக பகிர்வார்கள்; ஆனால் போலி குருக்கள் புகழ்ச்சி மற்றும் பிற தந்திரங்களை பயன்படுத்தி மோசடி திட்டங்களை விற்க முயல்வார்கள்.